


சுற்று வட்டார கிராம மக்கள் சார்பில் உயிர் கண்காட்சி விழா கொண்டாடப்பட்டது.

# கோவையில் பிரபல சாதனை புத்தகமான நோபள் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்டு 2020 வெளியீட்டு விழா

## விழாவில் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த சாதனையாளர்கள் சிறப்பு விருது




கோவையில் பிரபல சாதனை புத்தகமான நோபள் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்டு 2020 வெளியீட்டு விழா நடைபெற்றதுஞ் விழாவில் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த சாதனையாளர்கள் சிறப்பு விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.

இளம் மாணவ, மாணவிகளின் பன்முக திறமைகளான கராத்தே, சிலம்பம் கிராமிய கலைகள் உட்பட பல்வேறு துறை சார்ந்த திறமைகளை ஊக்குவிக்கும் வகையில் உலக சாதனை பதிவாக நோபள் புக் ஆப் ரெக்கார்டு செயல்பட்டு வருகிறது. உலகம் முழுவதும் பல்வேறு சாதனையாளர்களை உருவாக்கி வரும் இதன் புதிய நோபள் சேவா ரத்னா அவார்டு அறிமுக விழா மற்றும் 2020 சாதனை புத்தக வெளியீட்டு விழா கோவை அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது. நோபல் புக் ஆப் ரெக்கார்டின் வெளியீட்டு ஆசிரியர் தியாகு நாகராஜ் தலைமையில் நடைபெற்ற இதில்,ஏசியன் இயக்குனர் ராஜ்குமார் நடராஜன்,தூதர் சொக்கலிங்கம் பாலாஜி மற்றும் பல்வேறு பிரிவின் இயக்குனர்கள் ஹன்சி கிருஷ்ணமூர்த்தி, மோகன் குமார், சந்தோஷ்குமார், பான்ச்சா,கர்நாடாகா ,மற்றும் ஆந்திராவை சேர்ந்த பூர்ணிமா,பாஸ்கர் கலைபிரிவின் ஸ்னேஹா ராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக முனைவர் சங்கரன் மற்றும் திண்டிவனத்தை சேர்ந்த கல்வியாளர் நவீன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.விழாவில் நோபள் சேவா ரத்னா அவார்டு அறிமுகம் செய்யப்பட்டு அதனை தொடர்ந்து நோபல் புக் ஆப் ரெக்கார்டு 2020 வெளியிடப்பட்டது. பின்னர் கடந்த ஆண்டில் நோபள் புக் ஆப் ரெக்கார்டில் இடம் பிடித்த சாதனையாளர்கள் அனைவரும் விருதுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர்.